முருகப்பெருமான் துணை

**மகான் திருமூல தேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.12.2022**, வியாழக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா போற்றி
மண்ணுலகம் மீட்க காக்கவே
பூதலத்தில் ஆறுமுகனார் அவதார
புண்ணிய வடிவாய் வந்த தேசிகா போற்றி
2. போற்றியே உன்பெருமை கூறி
புகலுவேன் அனுகூல ஆசிதனை
ஆற்றல்பட சுபகிருது தேள் திங்கள்
அறிவிக்க இருபானீர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22 ம் நாள் 08.12.2022, வியாழக்கிழமை)
3. வாரமதில் திருமூல தேவர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமிலா இயற்கை வளமுடன்
சுபிட்சமான தெய்வ அனுகூலமும்
4. அனுகூலமும் பெற வேண்டுமாயின்
அறம் புவியில் நிலைக்க வேணும்
அனுகூலமாக மக்களிடை தயவு
அளவிலாப் பெருகிட வேண்டும்
5. பெருகவே பிரம்ம ஞானியாக
பேருலகில் அறம் வளர்க்கவே
முருகப்பெருமானின் சக்திபட
முழுமை கண்ட ஞானியாக வந்து அரங்கன்
6. அரங்கன் அன்னதான சேவையை
அனைத்து திக்கிலும் துவக்கி
வரங்கள் தந்து உலகளாவியபடி
வல்லமையான கிளைகளை படைத்து
7. படைத்துமே தரும சேவையை
பாருலகில் வளர்த்து வர
தடையின்றி கலியுக மக்கள்
தவராஜன் தருமத்தை ஆதரித்து
8. ஆதரித்து பொருளுதவி செய்து
அரங்கமகான் திருவடி பற்றி
பூதலத்தில் சீடர்களாகித் தொடர
புண்ணியம் காத்து வளர்த்து வர
9. வருகவே உலகம் எங்கிலும்
வந்தடையும் சர்வ பாதுகாப்பு
பெருமை மிக்க இயற்கை ஆசிபட
பொருள் வளம் தொழில் வளமென

10. வளமென சகல வகையும் தேறி
வளர்ச்சி கண்ட உலகமாக
வேலவன் ஆசிெ பற்ற லோகமாக
வினவிட காலனை  வென்ற பூமியாக

11. ஆகவே நல்லுலக மாற்றம்
ஆன்மீக ஞான ஆட்சி கொண்ட
ஞானயுகமாக யுகமே மாறும்
நாட்டிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–